## <u>சுருக்கம்</u>

வீட்டு வசதி – தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை குடியிருப்புத் திட்டம் – வீட்டுவசதி வாரிய பராமரிப்பு – அனைத்து ஊழியர்களுக்கும் வாடகை குடியிருப்பு 2% விழுக்காட்டிலிருந்து 3% விழுக்காட்டாக உயர்த்தி ஆணை வெளியிடப்படுகிறது.

---

வீட்டுவசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித் (விவ–3(1)துறை

அரசாணை (2டி) எண். 325

நாள்: 1.11.2007

பார்வை :

1. அரசு நிலை ஆணை எண்.1126 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 17.7.1972.
2. தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய செயலாளர் மற்றும் பணியாளர் கடித எண்.அவாபி4/41406/06 நாள் 23.10.06

---

<u>ஆணை:</u>

தமிழ்நாடு அரசு அலுவலர், வாடகை குடியிருப்புகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக பார்வை 1–ல் படிக்கப்பட்ட அரசு ஆணையில் வாரிய வீட்டுவசதி திட்டப்பகுதிகளில் பணிபுரியும் வாரிய ஊழியர்களுக்கு பராமரிப்பு பிரிவின் கீழ் அரசு வாடகை குடியிருப்பை 2% விழுக்காடு ஒதுக்கீடு செய்து ஏற்கனவே ஆணை வெளியிடப்பட்டது.

2. தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய மேலாண்மை இயக்குநர்–ஆல் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசு வாடகை குடியிருப்புகளில் பராமரிப்பு மற்றும் பராமரிப்பு அல்லாத வாரிய ஊழியர்களுக்கு 3% விழுக்காட்டின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படின் பராமரிப்பு பணிகள் துரித முறையில் செயல்படுவதுடன் அரசு வாடகை வீடுகளின் காலி வீடுகளும் குறைக்கப்பட்டு அரசுக்கு வருமானம் ஏற்பட வாய்ப்புள்ளது என்று தெரிவித்துள்ளார். எனவே தற்போது பராமரிப்பு பணியில் உள்ளோருக்காக மட்டும் 2% வாடகை வீடு ஒதுக்கப்படுவதை இனி 3% ஆக உயர்த்தி வீட்டுவசதி வாரிய அனைத்து அலுவலர்களுக்கும் இச்சலுகை அளிக்கலாம் என்று அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அரங்க.செல்லமுத்து
அரசு செயலாளர்

பெறுநர்
தலைவர்/மேலாண்மை இயக்குனர்,தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சென்னை–35.
தலைவர், தமிழ்நாடு வீட்டுவசதி தொழிலாளர் முன்னேற்ற சங்கம், 688/11 அண்ணாசாலை, நந்தனம், சென்னை–35.
மாண்புமிகு அமைச்சர் வருவாய் மற்றும் வீட்டுவசதி அவர்களின் சிறப்புநிலை உதவியாளர், சென்னை–9
செயலாளர் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நேர்முக செயலர், சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.